குற்ற வழக்குத் தொடர்வுத் துறை

**சென்னை, குற்ற வழக்குத் தொடர்வு துறை இயக்குநர்(பொ) அவர்களின் செயல்முறை ஆணைகள்**

**முன்னிலை : திரு சு. சண்முகம், பி.ஏ.,பி.எல்.**

**ந.க.எண். 3230/குவதொஇ/அ2/2007** **நாள் 09-/05/2016**

**(இயக்கக ஆணை எண் 51 /2016)**

| | |
|---|---|
| **சிறுதலைப்பு** : | பொதுப்பணிகள் – குற்ற வழக்குத் தொடர்வுத்துறை –திருமதி கிவி,. காயத்ரி, தட்டச்சர், குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் அலுவலகம், – பணிவரன்முறை செய்து (தகுதிகாண் பருவம் தொடங்கும் நாள்)ஆணை வழங்குதல் தொடர்பாக. |
| **படிக்கவும்** : | 1) இவ்வியக்ககக பணிநியமன ஆணை ந.க. எண். 3230/குவதொஇ/அ2/2007 நாள் 03/07/2013 (இவ்வியக்கக ஆணை எண் 131/2013)<br>2)திருமதி கிவி காயத்ரி அவர்களது பணி அறிக்கை விண்ணப்பம் நாள் 10/07/2013.<br>3) இவ்வியக்ககக் கருத்துரு ந.க. எண். 3230/குவதொஇ/அ2/2007 நாள் 02/01/2015<br>4) அரசாணை (பல்வகை) எண் 130, பணியாளர்(ம) நிர்வாகச் சீர்திருத்த(எஸ்) துறை நாள் 22/07/2008.<br>5) அரசாணை (நிலை) எண் 80 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(க்யு 1)த் துறை நாள் 02/03/2016.<br>6) அரசுக் கடிதம் எண் 46839/நீதிமன்றம் –6/2015–3 துறை நாள் 18/04/2016. |

**ஆணை :**

பார்வை ஒன்றில் காணும் இவ்வியக்கக பணி நியமன ஆணையின்படி திருமதி கிவி காயத்ரி அவர்கள் தட்டச்சராக குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் அலுவலகத்தில் பணிநியமனம் செய்யப்பட்டார். பார்வை இரண்டில் காணும் தனியாரது பணி அறிக்கை விண்ணப்பத்தின்படி, தனியர் 10/07/2013 முற்பகல் முதல் குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் அலுவலகத்தில் தட்டச்சராக பணிக்கு அறிக்கை செய்து பணிபுரிந்து வருகிறார் .

தொடர்கிறது------

Scanned by TapScanner

2) நடைமுறையில் இருந்த முந்தைய விதிகளின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர்/தட்டச்சராக பணிநியமனம் செய்யப்பட்டவர்களது பணியினை வரன்முறை செய்து அரசு தான் ஆணையிடப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில் பார்வை மூன்றில் இவ்வியக்கக கருத்துரு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி கருத்துரு அரசின் பரிசீலனையில் இருந்த வந்த நிலையில் பார்வை ஐந்தில் காணும் அரசாணை வெளியிடப்பட்டது.அதனைத் தொடர்ந்து பார்வை ஐந்தில் காணும் அசாணையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, இவ்வியக்ககத்திலிருந்து அனுப்பப்பட்ட கருத்துரு பார்வை ஆறில் காணும் அரசுக் கடிதம் வாயிலாக இவ்வியக்ககத்தில் திரும்ப பெறப்பட்டது. மேற்படி அரசாணையில் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**1.2.2016 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டு , எந்தவித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாத அனைத்து அலுவலர்களின் பணி நியமனமும் இதன் மூலம் நடைமுறையில் உள்ள விதிமுறைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படுகிறது. மேலும் சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்கள் (appointing authority) அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட உரிய செயல்முறை ஆணை (proceedings) வெளியிட்டு தொடர்புடைய அரசுப் பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.**

**மேலும் அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உள்ளீட்டு எல்லைக்குள் வரும் பதவிகளில் பணியமர்த்தப்பட்ட அரசு அலுவலர்களின் பணியினை வரன்முறைப்படுத்திய பின் 1954–ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினை பெறும் பொருட்டு உரிய முன் மொழிவுகள் நடைமுறையில் உள்ள வழிமுறைகளின்படி அரசுக்கு அனுப்பப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

3) னவே, திருமதி கி.வி. காயத்ரி, தட்டச்சர், குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் அலுவலகம் அவர்களது பணியினை பணிக்கு அறிக்கை செய்த நாள் முதல் பின்வருமாறு வரன்முறை செய்து (தகுதிகாண் பருவம் தொடங்கும் நாள்) ஆணையிடப்படுகிறது.

| **வரிசை எண்** | **பெயர்/பதவி/பணிபுரியும் அலுவலகம்** | **பணிக்கு அறிக்கை செய்த நாள்** | **பணி வரன்முறை செய்த நாள் (தகுதிகாண் பருவம் தொடங்கும் நாள்)** |
|---|---|---|---|
| 1. | திருமதி கி.வி. காயத்ரி,<br>தட்டச்சர்,<br>குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் அலுவலகம், | 10/07/2013 முற்பகல் | 10/07/2013 முற்பகல் |

தொடர்கிறது---------

Scanned by TapScanner

4) மேற்படி தனியாரது பணியினை பணிவரன்முறை செய்யப்பட்டு, (தகுதிகாண் பருவம் தொடங்கும் நாள்) மூன்றாண்டுகள் தொடர்ந்த பணிக்காலத்தில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுவார். . மேலும் நடைமுறையில் உள்ள பணிவிதிகளின்படி, இளநிலை உதவியாளர்/ தட்டச்சர் அவர்கள் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வினை எழுதி தேர்ச்சி பெறுதல் வேண்டும். அதற்குப் பின்னர் தான் இரண்டாம் மற்றும் தொடர் ஆண்டு ஊதிய உயர்வு வழங்கப்படுதல் வேண்டும். மேலும் சுட்டு நான்கில் காணும் அரசாணையின்படி அந்த அரசாணை வெளியிட்ட தேதிக்குப் பின்னர் பணி அமர்த்தப்பட்ட தட்டச்சர்கள் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர்கள் நிலை–3 ஆகியோர் அவர்களது தகுதிகாண் பருவ காலத்திற்குள் **அலுவலகப் பணிகள் கணினி மயம்** சான்றிதழ் தேர்வில் தேர்ச்சி அடைய வேண்டும். எனினும் பார்வை ஐந்தில் காணும் அரசாணையின்படி தனியருக்கு இதன் மூலம் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

5) மேலும் மேற்படி தனியர் இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் நிலையிலிருந்து உதவியாளராக பதவி உயர்வு பெறுவதற்கு சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம் –1ல் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

6) எனவே, திருமதி கி.வி. காயத்ரி, தட்டச்சர் அவர்களுக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட (தகுதிகாண் பருவம் தொடங்கும் நாள் முதல்) விவரத்தினை தனியரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்படுகிறது. மேலும் தனியருக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவையில் உள்ள இரண்டாம் மற்றும் தொடர் ஆண்டு ஊதிய உயர்வினை தனியருக்கு தனியாக வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்கிறது---------

Scanned by TapScanner

7) இந்தச் செயல்முறை ஆணையினை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகையை தனியர் சமர்ப்பித்தல் வேண்டும்.

**இயக்குநர்(பொ).**

**பெறுநர்**

திருமதி கிவி. காயத்ரி,

தட்டச்சர்,

குற்ற வழக்குத் தொடர்வு உதவி இயக்குநர் அலுவலகம்,

சென்னை–5,

**நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது** : அரசு முதன்மைச் செயலர், உள்(நீதிமன்றம்–6) துறை, தலைமைச் செயலகம், சென்னை–9,

**நகல்** : இயக்குநரின் நேர்முக உதவியாளர், கு.வ.தொ.இயக்ககம், சென்னை–5.

**நகல்** : இயக்கக ஆணைப்புத்தகம்/கோப்புக்கு/இருப்புக் கோப்புக்கு/உபரி

Scanned by TapScanner